மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் அமைப்புகள் இருந்தாலும், இராமேஸ்வரத்தில் கூடுதலாக ஓர் ஒருங்கிணைந்த வளாகம் தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கருத்திற்கொண்டு, இந்த நிதியாண்டிலாவது அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் முன்வரும்பட்சத்தில் அரசு மானிய உதவிகளை அவர்களுக்கு வழங்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இணைந்து புதிய தொண்டு நிறுவனம் தொடங்கிட முன்வந்தால் அரசு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

மீன் உலர் தளம்

***17863—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, பெரியதாழை கிராமத்தில் மீன் உலர் தளம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதி, பெரியதாழை மீனவக் கிராமத்தில் மீன் உலர் தளம் அமைக்க வேண்டும் என்று

2023 ஜனவரி 11]

கோரியுள்ளார்கள். தேவையிருப்பின், ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியதாழை என்பது 2,000 குடும்பங்களுக்குமேல் உள்ள மீனவக் கிராமம் ஆகும். அங்கே கடல் சீற்றம் அதிகமாக ஏற்படுவதால், கடல் மண் அரிப்பு ஏற்படுகிறது. அதைப்போல, அங்குள்ள படகுகள் கவிழ்கின்றன; உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. அவற்றைத் தடுக்கும் வகையில், நம்முடைய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. எனினும், அங்கேயுள்ள 800 மீட்டர் நீளமுள்ள தூண்டில் வளைவுப் பாலத்தை நீட்டித்து, இன்னும் கூடுதலாக 600 மீட்டர் நீளம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதி, பெரியதாழை மீனவக் கிராமத்தில் 370 நாட்டுப் படகுகள் உள்ளன; சுமார் 1,500 மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இங்கே நாள்தோறும் 30 டன் முதல் 40 டன் வரை மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன. இந்த மீன்கள் அனைத்தும் அன்றைக்கன்றே விற்பனை ஆகிவிடுகின்றன. மீன்களைச் சேமித்து வைக்க வேண்டிய நிலை எழவில்லை. இங்குள்ள மீனவர்கள் தங்கள் பகுதியில் மீன் ஏலக் கூடம் உள்ளிட்ட வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர். அதனையேற்று, கடந்த 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூ.9 கோடி செலவில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரியதாழை மீனவக் கிராமத்தில் கடல் அரிப்பினைத் தடுத்திட 50 மீட்டர் நீளத்தில் இரண்டு*

நேர்கல் சுவர், 6 மீன் ஏலக் கூடங்கள், 900 மீட்டர் நீளத்திற்கான சாலை வசதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த வசதிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் மீனவர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

முற்பகல் 11–05

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தூண்டில் வளைவை நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை எங்கள் துறையினுடைய அலுவலர்களுடன் ஆய்வு செய்து, தேவையிருப்பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் என்னுடைய தொகுதியில் பழைய காயல் என்ற கிராமம் இருக்கிறது. அங்கு கடல்நீர் உட்புகுந்து வருவதால், அங்கேயும் 500 மீட்டர் நீளமுள்ள தடுப்புச் சுவர் அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்ற கேள்வியையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பழைய காயல் பகுதியில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை இன்றைக்கு வைத்திருக்கின்றார்கள். தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கடற்கரைப் பகுதிகளில் தூண்டில் வளைவு வேண்டும்; தடுப்புச் சுவர் வேண்டும்; என்ற கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கின்றன. ஆனாலும், இன்றைக்கு தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் கடலில் கடினமான கட்டுமானப் பணிகளான அலை தடுப்புச் சுவர்,

2023 ஜனவரி 11]

நேர்கல் சுவர் போன்றவற்றை மேற்கொள்ளக் கூடாது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பின்படி கடற்கரை மேலாண்மைத் திட்டம் தயாரித்து ஒன்றிய அரசுக்கு அனுப்பி (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதி பெறுகின்றவரை, கடலில் கடினமான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின்மூலம் கடலோர மேலாண்மைத் திட்டத்திற்கான ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அந்த வகையிலே அந்தத் திட்டங்கள் நிறைவேறுகின்றபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட பழைய காயல் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கின்ற திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, நிதிநிலைக்கேற்றாற்போல், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

பழுப்பு நிலக்கரி திட்டம்

***7404—திரு. க.சொ.க. கண்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி திட்டத்தைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் ஆண்டில்*